**அ.வ.எண்: 41/2017** **நாள்:13.10.2023**

**வா.சா.1. காயத்ரி**

**17 வது பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை :**

1) தாவா சொத்து என் மாமனார் முனியமுத்துவிற்கு சொந்தமானது என்றால் இல்லை முனியமுத்துவின் அப்பாவிற்கு சொந்தமானது. முனியமுத்து தகப்பனார் இறந்தவுடன் தாவா சொத்தில் முனியமுத்து தான் வாரிசு அடிப்படையில் அவர் அனுபவத்தில் இருக்கிறது என்றால் சரிதான். முனியமுத்து தான் வாரிசு தாரர் என்பதற்கு வாரிசு சான்று தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. வாரிசு சான்று தாக்கல் செய்யாததால் இந்த வழக்கானது ஏற்றுக்கொள்ளகூடியது அல்ல என்றால் சரியல்ல.

2) என் கணவர் தான் இறந்து போன முனியமுத்துவின் மகன் என்பதற்கு வாரிசு சான்று தாக்கல் செய்துள்ளேனா என்றால் தாக்கல் செய்யவில்லை இறப்பு சான்று தாக்கல் செய்துள்ளேன். என் கணவரின் வாரிசுகள் நாங்கள் என்பதற்கு ஆவணங்கள் நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் தாக்கல் செய்யவில்லை.

தொடர் குறுக்கு விசாரணைக்காக வழக்கு ஒத்திவைக்கப்படுகிறது.

/ஒ.ம்./

பெ. சந்திரசேகர், பி.ஏ., பி.எல்.,
மாவட்ட உரிமையியல் நீதிபதி,
திருவையாறு.